**செ.வெ. எண்:507** **நாள். 27.10.2016**

**டெங்குகாய்ச்சல் தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஆன்ட்ராய்டு கைபேசி செயலி (Mobile Android Application) வெளியீடு**

**————————**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் சீரிய தலைமையில் செயல்படும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்க விரைந்து பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து தொய்வில்லாமல் மேற்கொண்டு வருகின்றது.

பொது மக்களிடையே ஏற்படுத்தப்படும் விழிப்புணர்வு டெங்கு குறித்த அச்சத்தை போக்கி டெங்கு மற்றும் இதர காய்ச்சல்களிலிருந்து பொதுமக்கள் தங்களை காத்துக்கொள்ள ஏதுவாக அமையும். இதன் ஒரு அங்கமாக தமிழ்நாடு முழுவதும் டெங்கு விழிப்புணர்வு மற்றும் இதர தொற்றுநோய்களுக்கான விழிப்புணர்வு ஆய்வுக்கூட்டங்கள் தொடர்புடைய அரசுத்துறைகளுடன் இணைந்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக காய்ச்சலின்போது செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை தொடர்பாகவும் ஒரு விரிவான அறிக்கை வெளியிடப்பட்டது. மேலும் கூடுதல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக கைப்பேசி ஆன்ட்ராய்டு செயலி (Mobile Android Application) இன்று வெளியிடப்படுகிறது. இதை கூகுள் பிளேஸ்டோரிலிருந்து (Google Play store) Dengue fever Tamil செயலியை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இந்த செயலியில் டெங்குகாய்ச்சலை உருவாக்கும் ஏடிஸ் கொசுக்கள் வளர ஏதுவான இடங்கள் படத்துடன் விளக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை தீர்க்கும் வகையில் கேள்வி பதில் பகுதியும், சித்த மருத்துவம் மூலம் டெங்கு காய்ச்சலை தடுக்கும் விதம் குறித்தும் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிரபலங்கள் பேசிய குறும்படங்கள் இந்த செயலியில் இணைக்கப்பட்டுள்ளது மேலும் இக்குறும்படங்கள் வாட்ஸ் அப் (Whats App) மூலமாக பொதுமக்களை சென்றடையும் வகையில் வெளியிடப்படவுள்ளது. கூடுதல் தகவல்களுக்கும் அவசர உதவிக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய 104, 108 மற்றும் பொது சுகாதாரத்துறையின் 24 மணி நேர கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் செயலியில் இருந்தே இந்த எண்ணை தொடர்புகொள்ளும் விதமாக செயலி எளிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த கைபேசி செயலி குறித்து மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

இக்கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மை செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திரு. மோகன்பியாரே, இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் செல்வி. அபூர்வா இ.ஆ.ப., தேசிய நலவாழ்வு மையத்தின் திட்ட இயக்குநர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் திட்ட இயக்குநர் திரு. நடராஜன், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டாக்டர் க. குழந்தைசாமி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**